செ.வெ.எண் : 140 நாள் : 25.02.2009

# மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னை 600 002

நாள்:24.02.2009

## பத்திரிக்கை செய்தி

**25.02.2009** அன்று காலை **08.45** மணியளவில் சென்னை அண்ணா சதுக்கத்தில் அமைந்துள்ள பேருந்து நிலைய வளாகத்தில் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பணிக்காலத்தில் இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் வேலை வழங்கும் திட்டத்தில் மாநகர போக்குவரத்துக் கழகத்தில் பணிக்காலத்தில் இறந்த பணியாளர்களின் தகுதி பெற்ற வாரிசுதாரர்களுக்கு இந்த ஆட்சி பொறுப்பேற்ற பின்பு 12 ஓட்டுநர்கள் மற்றும் 118 நடத்துனர்கள் ஆக 130 வாரிசுதாரர்களுக்கு பணி புரிவதற்கான ஆணை ஏற்கனவே வழங்கப்பட்டது. தற்பொழுது நிர்வாகம் மற்றும் தொழில்நுட்ப பிரிவுகளில் இனிவரும் காலங்களில் ஏற்படும் காலியிடங்களைக் கருத்தில் கொண்டு 314 வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கியும் மற்றும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் முதலமைச்சர் வெகுமதி திட்டத்தின் கீழ் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து விபத்தின்றி பணிபுரிந்த 6 ஓட்டுநர்களுக்கு தலா ரூ.10000/– வீதம் 2007–2008 ஆம் ஆண்டிற்கான வெகுமதித் தொகை **மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்** திரு. **கே.என். நேரு** அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு **மு.க. ஸ்டாலின்** அவர்கள் வழங்கி சிறப்புரையாற்றினார்கள்.

இவ் விழாவில் போக்குவரத்துத்துறை அரசு முதன்மைச் செயலர் திரு. **தேபேந்திரநாத் சாரங்கி,** இ.ஆ.ப அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு **மா. இராமசுப்ரமணியன், மேலாண் இயக்குநர்** அவர்கள் நன்றி நவின்றார். தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், தொழிலாளர்களும் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மா. இராமசுப்ரமணியன்
மேலாண் இயக்குநர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9